# <u>பத்திரிகைசெய்தி</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் அரசு / தனியார் மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் டெங்கு கொசு வளராமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட சுகாதாரமான கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் **"தூய்மைக்கான சவால் ஜெயிக்கப் போவது யாரு?"** என்ற போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 17.11.2017 ஆகும். போட்டிக்கான விண்ணப்ப படிவங்கள் www.thoothukudi.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். மேலும் இந்த விண்ணப்பபடிவத்தை மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகம், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) அலுவலகம் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம் ஆகியவற்றில் நேரடியாகபெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் வரப்பெற்ற பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நியமிக்கப்படும் மாவட்ட ஆய்வுக் குழுவால் விண்ணப்ப படிவத்தில் கண்டுள்ள இனங்களின்படி 20.11.2017 முதல் ஆய்வு மேற்கொள்ளப்படும். மருத்துவமனை/ கல்வி நிறுவனங்களில் சுற்றுப்புறங்கள் தூய்மையாக உள்ளதா?, குடிநீர் தொட்டி முறையாக பராமரிக்கப்படுகின்றதா?, கழிப்பறைகள் தினம்தோறும் சுத்தம் செய்யப்பட்டு தூய்மையாக உள்ளனவா? டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக மாணவ/ மாணவிகளுக்கு முறையான விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளதா?, மருத்துவமனைகள்/ பள்ளி / கல்லூரி வளாகங்களில் தண்ணீர் தேங்கி உள்ளதா?, டெங்கு கொசு உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் உள்ள பொருட்கள் (டயர், பாலித்தீன் பைகள், பிளாஸ்டிக் போன்ற பொருட்களில் நீர் தேங்கியிருத்தல்) முறையாக அகற்றப்பட்டுள்ளதா? பள்ளி / கல்லூரிகளில் டெங்கு காய்சலினால் பாதிக்கப்பட்ட மாணவ/ மாணவியர் உள்ளனரா என்ற நோக்கில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சிறந்த தூய்மையான மருத்துவமனை / பள்ளி / கல்லூரி நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்ப படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி,**

| | |
|---|---|
| கல்வி நிறுவனங்கள் | முதன்மை கல்வி அலுவலர்,<br>சி.வா. மேல்நிலைப் பள்ளி வளாகம்,<br>தூத்துக்குடி |
| மருத்துவமனைகள் | துணை இயக்குநர் (சுகாதார பணிகள்)<br>வடக்கு பீச் ரோடு, மீன்வளத்துறை வளாகம்,<br>தூத்துக்குடி |

மாவட்டஆட்சித்தலைவர்,
தூத்துக்குடி.



தூத்துக்குடியில் தூய்மைக்கான
சவால்
பங்குபெறுவீர்!
வெற்றி பெறுவீர்
நாம் வேறு
இடத்திற்கு
செல்ல வேண்டியது
தான்
போட்டியில் பங்கு
பெற கடைசி நாள்
17.11.2017
டெங்கு கொசு
வளராமல் தடுப்பு
மேற்கொள்ளப்பட்ட
மருத்துவமனைகள் &
கல்விநிலையங்கள்
போட்டியில் பங்கு பெற
நாங்கள் ரெடி! நீங்க ரெடியா ?
STOP
HOSPITAL
Welcome Back to School
SCHOOL BUS
பாட்டியில் பங்கு பெற தகுதியானவர்கள் டெங்கு கொசு வளராமல் தடுப்பு
டவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள
அரசு / தனியார் மருத்துவமனைகள் & கல்வி நிலையங்கள்
மாவட்ட
ஆட்சித்தலைவ
தூத்துக்குடி மாவட்டம்

## தூத்துக்குடியில் தூய்மைக்கான சவால்

## டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக மருத்துவமனைகள்/ பள்ளி/ கல்லூரிகள் கலந்து கொள்ளும் போட்டிக்கான விண்ணப்ப படிவம்

| | |
|---|---|
| மாவட்டம்: | |
| மருத்துவமனை/ பள்ளி/ கல்லூரியின் பெயர்: | |
| மருத்துவ அலுவலரின் பெயர் : பள்ளி தலைமையாசிரியர்/ கல்லூரி முதல்வரின் பெயர்: | |
| முகவரி: ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சி/ மாநகராட்சி: | |

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவமனை/ பள்ளி/ கல்லூரி இருப்பிடம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் தூய்மையாக உள்ளதா? | ஆம்/ இல்லை |
| 2. | 1. மருத்துவமனை/ பள்ளி/ கல்லூரியில் உள்ள கழிவறைகளில் தினந்தோறும் தூய்மைப்பணி மேற்கொள்ளப் படுகின்றதா? | ஆம்/ இல்லை |
| | 2. பள்ளி/ கல்லூரி மாணவிகளுக்கான கழிவறையில் இன்சினேட்டர் பொருத்தப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை |
| 3. | மருத்துவமனை / பள்ளி/ கல்லூரிகளின் மேல்தளத்தில் குப்பைகள் மற்றும் இதரப் பொருட்கள் தூய்மைப்பணி செய்யப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை |
| 4. | குடிநீர் தொட்டி முறையாக பராமரிக்கப்படுகின்றதா? | ஆம்/ இல்லை |
| | | ஆம் எனில்<br>(மூன்று நாட்களுக்கு ஒரு முறை/<br>வாரத்திற்கு ஒரு முறை/<br>மாதத்திற்கு ஒரு முறை) |
| 5. | டெங்கு கொசு உற்பத்தியாகக்கூடிய நிலையில் உள்ள இடங்கள் கண்டறியப்பட்டு, அப்புறப்படுத்தப் பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை |
| 6. | மருத்துவமனை / பள்ளி / கல்லூரியின் வெளிப்புறங்களில் நீர் நிலைகள் தேங்க இயலாத நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றதா? | ஆம்/ இல்லை |
| 7. | மருத்துவமனை / பள்ளி/ கல்லூரியின் வளாகங்களில் உள்ள குப்பைகள் முறையாக அகற்றப்படுகின்றதா? | ஆம்/ இல்லை |
| 8. | டெங்கு கொசு உற்பத்தி செய்யப்படும் இடங்கள் முறையாக அகற்றப்பட்டுள்ளனவா? | ஆம்/ இல்லை |
| 9 | மழைநீர் தேங்க வாய்ப்புள்ள பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதா? | ஆம்/ இல்லை |
| 10. | டெங்கு காய்ச்சல் தடுப்பு முறைகள் குறித்து செவிலியர்கள் / மாணவ/ மாணவியர்கள் அறிந்துள்ளனரா? | ஆம்/ இல்லை |

மருத்துவ அலுவலரின் கையொப்பம் /
பள்ளி தலைமையாசிரியர்/
கல்லூரி முதல்வரின் கையொப்பம்